*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **19 நவம்பர் 2022**

# பத்திரிகை செய்தி

உலக குழந்தைகள் துஷ்பிரயோகம் தடுப்பு தினத்தை ஒட்டி, எஸ் ஓ எஸ் குழந்தைகள் கிராமம் மற்றும் பி.எம்.எஸ்.எஸ். எஸ் சார்பில் புதுச்சேரி, கடற்கரை சாலை, காந்தி சிலை அருகில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் இன்று (19-11-2022) தொடங்கி வைத்தார்.
நலத்துறைச் செயலர் திரு உதயகுமார், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி. முத்துமீனா மற்றும் அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.
பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து துணைநிலை ஆளுநர் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

- குழந்தைகளை துன்புறுத்தக் கூடாது. குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும். குறைப்பாக குழந்தைகள் பாலியல் தொந்தரவில் ஈடுபடுத்த கூடாது. அவர்களை துன்பப்படுத்தக் கூடாது. குழந்தைகளை கண்டித்து வளர்ப்பதை விட கண்காணித்து வளர்க்க வேண்டும். அன்போடு வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இந்த நடை பயணம். அதில் குழந்தைகளேய கலந்து கொண்டது பெரு மகிழ்ச்சி.
- குழந்தைகளுக்கான பாதுகாப்பு வேண்டும் என்பதை வலியுறுத்தக்கூடிய இந்த நாளில், குழந்தைகளுக்கான கல்வி, உணவு, போன்றவற்றையும் உறுதி செய்ய வேண்டும். 60 சதவீதத்திற்கும் மேலான குழந்தைகள் ரத்தசோகை நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று உலக சுகாதார மையம் சொல்கிறது. அதனால் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உள்ள ஆகாரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- மாணவர்களின் மதிய உணவை பற்றி ஒரு ஆய்வு செய்தார்கள். மதிய உணவை திறந்து பார்த்தபோது அதில் நூடுல்ஸ், பிரட், சிப்ஸ் போன்ற அவசர உணவுகளாக இருந்தது. இதுக்கு குழந்தைகளுக்கு சத்தை தராது. 2023 ஆம் ஆண்டை சிறுதானிய ஆண்டாக அறிமுகப்படுத்துகிறோம். அதற்கு இந்தியாவே காரணம். சிறுதானியத்தில் அவ்வளவு சத்து இருக்கிறது. குழந்தைகளுக்கு சத்தான உணவு அளிக்க வேண்டும். குழந்தைகளுக்கு முட்டை அவசியம்.
- இன்று, குழந்தைகள் பாதுகாப்பு தினம் போன்றே “கழிப்பறை தினம் ”. சுவச் பாரத் என்று பாரதப் பிரதமர் முன்னெடுத்துச் சென்ற இந்த மாபெரும் திட்டத்தால் கழிப்பறை இல்லாத கல்விக்கூடங்கள் குறைந்து வருகிறது. ஆனாலும் இன்னும் அப்படிப்பட்ட பள்ளிகளில் இருக்கிறது. பெண் குழந்தைகள் படிப்பதை பாதையில் நிறுத்தியதற்கு காரணமே கல்வி அறை அல்ல, கழிப்பறை தான் என்று ஒரு ஆய்வு சொல்லுகிறது. அதனால் கழிப்பறைகள் கட்டுவதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, பாரத பிரதமர் தூய்மை பாரத திட்டத்தை முன்னெடுத்துச் சென்றது இதற்காகத்தான்.

- தமிழுக்குப் பெருமை சேர்க்கின்ற அளவில் இன்று காசி தமிழ் சங்கமம் என்ற மாபெரும் நிகழ்வு நடைபெற்றிருக்கிறது. புதுச்சேரியை சேர்ந்தவர்கள் 300க்கும் மேல் இதில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். இன்னும் ஆறு வாரங்கள் புதுச்சேரியைச் சேர்ந்த கலைஞர்களும் அறிஞர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். இந்த காசி தமிழ் சங்கமம், தமிழுக்கும் காசிக்கும் எவ்வளவு கலாச்சாரப் பிணைப்பு இருந்தது என்பதை வலியுறுத்துவதாக இருக்கிறது. பாரதப் பிரதமர் தமிழ் அன்னைக்கு செல்கின்ற மாபெரும் பாராட்டாக இது இருக்கும்.
- பாரதியார் காசிக்கு சென்ற பிறகுதான் பல மனமாற்றங்களைப் பெற்றார் என்பது நமக்கு தெரியும். அதனால் நாமெல்லாம் கொண்டாடக் கூடிய நிகழ்வாக இது இருக்கிறது.
- குழந்தைகளுக்கு தவறான தொடுதல்-நல்ல தொடுதல் குறித்து சொல்லிக் கொடுக்க வேண்டும். மாற்றங்கள் கண்டறிந்தால் பெரியவர்களிடம் பகிர்ந்து கொள்ளக்கூடிய மனநிலை குழந்தைகளுக்கு வேண்டும். குழந்தைகள் சொன்னால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதை பொறுமையாக கேட்க வேண்டும். அது தவறு, அதை பேச வேண்டாம் என்ற மனநிலையில் வளர்த்தால் முதிர்ந்த நிலையில் ஒன்றும் செய்ய முடியாது.
- வட இந்தியாவில் ஒரு பெண்ணை பல துண்டுகளாக வெட்டி குளிப்பதனப் பெட்டியில் வைத்ததை கேள்விப்பட்டோம். இதெல்லாம் கலாச்சார சீரழிவால் ஏற்படுவது. பயங்கரமாக இருக்கிறது. குழந்தைகளை கண்காணித்து, பாதுகாப்பாக, சுதந்திரமாக வளர்க்க வேண்டும். குறிப்பாக பாலியல் தொந்தரவு செய்பவர்கள் எந்த விதத்திலும் தப்பித்து விடக்கூடாது. போக்சோ போன்ற சட்டங்கள் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.

என்று பேசினார்.